

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள்,தாழக்குடி பேரூராட்சி, மீனமங்கலம் என்ற இடத்தில் உள்ள கால்வாயில் (நாஞ்சில் நாடு, புத்தனூர் கால்வாய்) தீயணைப்பு மற்றும் மீட்புபணிகள் துறை சார்பாக நடைபெற்ற பேரிடர் மேலாண்மை ஒத்திகை நிகழ்ச்சியினை இன்று (07.10.2016) நேரில் சென்று பார்வையிட்டு, பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு பேரிடர் மேலாண்மை குறித்த கையேடுகளை வழங்கினார். மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ. இளங்கோ உடனுள்ளார்.

செ.வெ.எண்: 701/2016 நாள்: 07.10.2016

**இயற்கை இடர்பாடுகள் ஏதேனும் ஏற்பட்டால் அதனை உடனடியாக மாவட்ட நிர்வாகத்திற்கு தெரிவிக்க வேண்டும். கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், நடைபெற்ற பேரிடர் மேலாண்மை ஒத்திகை நிகழ்ச்சியில், பள்ளி மாணவ, மாணவிகள், பொதுமக்களிடம் வேண்டுகோள்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், தாழக்குடி பேரூராட்சி, மீனமங்கலம் என்ற இடத்தில் உள்ள கால்வாயில் (நாஞ்சில் நாடு, புத்தனூர் கால்வாய்) தீயணைப்பு மற்றும் மீட்புபணிகள் துறை சார்பாக நடைபெற்ற பேரிடர் மேலாண்மை ஒத்திகை நிகழ்ச்சியினை இன்று (07.10.2016) நேரில் சென்று பார்வையிட்டு, தெரிவித்ததாவது:-

கன்னியாகுமரி மாவட்டத்தில் வெள்ளபெருக்கு ஏதேனும் ஏற்படும்போது, பொதுமக்கள் அதிலிருந்து எவ்வாறு மீள்வது குறித்தும், அவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும்வகையிலும், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை சார்பாக தாழக்குடி பேரூராட்சி, மீனமங்கலம் என்ற இடத்தில் உள்ள கால்வாயில் (நாஞ்சில் நாடு, புத்தனூர் கால்வாய்) இன்று பேரிடர் மேலாண்மை ஒத்திகை நிகழ்ச்சி நடைபெற்றது.

குறிப்பாக பொதுமக்கள் வீட்டில் உபயோகிக்கும் பொருட்கள் மற்றும் எளிதாக கிடைக்கும் பொருட்களை வைத்து (குடம், தேங்காய் மட்டை, தண்ணீர் கேன், தண்ணீர் பாட்டில், காலியான சிலிண்டர், வாழைதண்டு) எவ்வாறு வெள்ளபெருக்கிலிருந்து மீள முடியும் என்பதை தீயணைப்புதுறை அலுவலர்கள் ஒத்திகை காட்டினார்கள். மேலும் வெள்ளபெருக்கிலிருந்து மீட்டி எடுத்தவர்களுக்கு அளிக்கப்படும் முதலுதவி, உடனடி மருத்துவ சிகிச்சை ஆகியவற்றை பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு காண்பிக்கப்பட்டது. வெள்ளபெருக்கு ஏதேனும் ஏற்படும்போது வருவாய்துறை, காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புபணிகள் துறை, மருத்துவ துறை, கால்நடை பராமரிப்புதுறை ஆகிய துறைகள் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும். மேலும் இயற்கை இடர்பாடுகள் குறித்து பொதுமக்கள் உடனடியாக மாவட்ட நிர்வாகத்திற்கு 1077 என்ற இலவச தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என தெரிவித்தார்.

முன்னதாக திட்டுவிளையை சார்ந்த பிஸப் ஞானதேசன் சி.எஸ்.ஐ. மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, கரோல் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, தாழக்குடி அரசு மேல்நிலைப்பள்ளி மாணவ, மாணவியர்கள் பேரிடர் மேலாண்மை ஒத்திகை நிகழ்ச்சியை பார்வையிட்டார்கள். பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேரிடர் மேலாண்மை குறித்து, விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ. இளங்கோ, நாகர்கோவில் கோட்டாட்சியர் திரு. ஆர்.ராஜ்குமார், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை நல அலுவலர் திரு. பி.வி.சரவணன், மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி. சின்னம்மாள், மாவட்ட தீயணைப்பு அலுவலர் திரு.ப. சரவண பாபு., நிலை அலுவலர்கள் திரு. துரை, திரு. சக்திகுமார், வட்டாட்சியர்கள் திருமதி. எல்.முத்துலெட்சுமி, திரு. ஆறுமுகநயினார், உள்ளிட்ட அரசு அலுவலர்கள், பள்ளி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.